தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை,

செவ்வாய்க்கிழமை, 1981 செப்டம்பர் 1,

ஆவணி 16, துன்மதி—திருவள்ளுவர் 2012.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9—00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற''

ஒரு செயலைச் செய்வதில் உறுதிப்பாடு என்று சொல்லப் படுவது அச்செயலைச் செய்பவனுடைய உள்ளத்தின் உறுதியே ஆகும். மற்றன எல்லாம் இதற்குப் பிற்பட்டனவே ஆகும்.

1. வினாக்கள்-விடைகள்.

(அ) உடுக் குறியிட்ட வினாக்கள்.

பழனியிலுள்ள டான்சி மூலம் உற்பத்தியாகும் பொருள்கள்

*வினா எண். 141—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) பழனியில் உள்ள டான்சி தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப் படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் மூலம் அரசுக்குக் கிடைக்கும் வருமானம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) இல்லை.

(ஆ) இந்தக் கேள்வி எழாது.

திரு. என். பழனிவேல்: பழனியில் அரசுத் துறையில் இயங் கக்கூடிய ஒரே ஒரு தொழிற்சாலை ''டான்சி'' தொழிற் சாலை மட்டும்தான். அதிலே நூற்றுக்குக் குறைவானவர்களே

வேலை செய்கிறார்கள். ஆனால், அங்கே நல்ல தரமான பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அதை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அதன் மூலம் நமது தமிழகத்திற்கும் இந்திய நாட்டுக்கும் அந்நியச் செலாவணியை சம்பாதிக்க அரசு முயற்சிக்கக் கூடாதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பழனியில் அமைந்திருக்கும் '' டான்சி '' இரும்பு எஃகு சாமான்கள் செய்யும் தொழிற்சாலை இன்றைய தினம் இலாபத்தில் இயங்கி வருகிறது. 1979–80-இல் ரூபாய் 3.20 இலட்சம் இலாபத்தை அந்த நிறுவனம் ஈட்டித் தந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே உற்பத்தி செய்யப்படுகிற இரும்பு எஃகு சாமான்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி அந்நியச் செலவாணியை ஈட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அங்கே உற்பத்தி செய்கிற இரும்பு எஃகு சாமான்களுக்கு நம்முடைய நாட்டிலேயே தேவை இருக்கிறது. 1979–80-ம் ஆண்டு அங்கே ஏறத்தாழ 24,23,000 ரூபாய் அளவுக்கு விற்பனை ஆகி இருக்கிறது. உற்பத்தி செய்கிற பொருளுக்கு உள்நாட்டிலேயே தேவை இருக்கிற காரணத்தால் வெளிநாட்டுக்கு அனுப்ப வேண்டிய அவசியமும் இல்லை, கட்டாயமும் இல்லை.

திரு. என். பழனிவேல் : அந்தத் தொழிற்சாலை தற்போது இலாபகரமாக நடந்து கொண்டிருப்பதாகவும் இந்த ஆண்டு கூட 3.20 இலட்சம் ரூபாய் இலாபம் கிடைத்திருப்பதாகவும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி இலாபகரமான தொழிலாக இருக்கக்கூடிய அந்தத் தொழிலை ஏன் அபிவிருத்தி செய்ய முயற்சிக்கவில்லை ? அது ஆரம்பகாலத்திலிருந்தே ஒரே அளவில் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆட்களையும் அதிகமாக எடுப்பதாகத் தெரியவில்லை. இலாபகரமாக ஓடிக்கொண்டிருக்கும் அந்தத் தொழிலை மேலும் விஸ்தரித்து பல தொழிலாளர்களுக்கு அந்தப் பகுதியில் வேலைகொடுக்க அரசு இனியாவது முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : நிச்சயம் அரசு தக்க நடவடிக்கைகளை உரிய நேரத்தில் எடுக்கும்.

பத்திரிகை நிருபர்களுக்கான அரசு அங்கீகாரம்

*வினா எண். 142—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்திரிகை நிருபர்களுக்கான அரசு அங்கீகாரம் (Press accreditation) வழங்குவது தினசரியில் பணியாற்றுபவர்களுக்கு மட்டும்தான் வழங்கப்படுகிறதா ?